கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 – ஒலி 20
15-05-2022



# அராஜக அட்டூழியங்கள் அழிந்தே போகும்...



# ஓடினான்! ஓடினான்! நாட்டைவிட்டே ஓடினான்!

அருட்பணி.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி வாசக நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கெட்டவனெல்லாம் நல்லா இருக்காய்ங்க, ஆனா நல்லவங்கள்லாம் கஷ்டப்படுறாங்களே என்று ஆதங்கப்படறவங்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி இலங்கையிலிருந்து வந்துள்ளது. அது ராஜபக்ஷேவின் வீழ்ச்சியும் அவனின் வீடு தீக்கிரையாகும் காணொளியும், அவனும், அவனது குடும்பமும் உயிர் காக்க தப்பித்து ஓடும் காணொளியும்தான். உலகில் வாழும் அனைவருக்கும் இந்நிகழ்ச்சி மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அவனது வீழ்ச்சியை சிங்களர்களே கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவன் ஆட்சிக் காலத்தில் பேரினவாதத்தை கையிலெடுத்து, சிங்களரல்லாதவர்களை முக்கியமாக தமிழினத்தை வேரோடு அழிக்க பேயாட்டம் ஆடினான். லட்சக்கணக்கான தமிழர்களை கொத்துக் கொத்தாக கொன்று குவித்த படுபாதகப் பயல் அவன். ஒரே மதம், ஒரே இனம், ஒரே மொழி என்ற பாசிச வேதத்தை எங்கும் போதித்தான். அவனின் கொடுங்கோல் ஆட்சியின் கோரப் பற்களிடமிருந்து தப்பிப் பிழைப்பதற்காகத் தமிழர்கள் அனைவரும் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாக ஓடிவிட்டார்கள். இன்றும் அவர்கள் அகதிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு அவன் முதலில் தமிழினத்தை வேரோடு அழித்துக் கொண்டிருந்தபோது சிங்களர்கள் அமைதியாக இரசித்துக்கொண்டு இருந்தார்கள். அதன்பிறகு இஸ்லாமியர்களைத் துன்புறுத்தியபோது பெரும்பான்மையான சிங்களர்கள் அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்தவருக்கு வரும் துயரத்தை வேடிக்கை பார்ப்பவர்களுக்கு அதுவே அவர்களுக்கே வரும் என்பார்களே அதுபோல, அவனின் தான்தோன்றித்தனத்தால் சிங்களப் பேரினமும் மட்டுமல்ல சிங்கள நாடே வறுமையிலும், அனைத்துப் பற்றாக்குறையாலும், கடுமையான பொருளாதார வீழ்ச்சயாலும் தத்தளித்த போதுதான் சிறுபான்மையினரின் துயரத்தை வேடிக்கை பார்த்து கொண்டிருந்த தவறால் இன்று தங்களுக்கு நேர்ந்த அவலத்தை இன்று உலகமே வேடிக்கை பார்த்து எள்ளி நகையாடுவதை எண்ணி தங்களின் பேரின பாசிசக் கொள்கை எவரையுமே விட்டு வைக்காது என்பதை வெகுதாமதமாக உணர்ந்துள்ளார்கள் சிங்களர்கள்.




துயரம் வந்தால் பிரிவினைகள் அழியும் என்பதற்கிணங்க, இலங்கைவாழ் மக்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒன்றிணைந்து பேரலையாக எழுந்து போரட ஆரம்பித்தபோது, அந்த பாசிச சர்வாதிகாரி, வேஷக்காரன் ராஜினாமா செய்துவிட்டு அவனும் அவனது குடும்பமும் ஓடி ஒழிந்து கொண்டார்கள்.

துவேஷத்தால் தூண்டப்படும் பேரினவாதத்தைவிட, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற அன்பு சகோதரத்துவத்தின் மீது கட்டப்படும் மாபெரும் பேரினவாதமே மிக உயர்ந்தது என்பதை இந்த சிங்கள அவலம் நமக்கு சுட்டிக்காட்டியுள்ளது. அதைத்தான் இறைச் சமூகம் என்றழைக்கப்படுகின்றது.

நெஞ்சை நிமிர்த்தி சிங்களப் பேரினமே வாழத் தகுதியுள்ளது என்று கொக்கரித்த அந்த மகிந்த ராஜபக்ஷே, இன்று பதுங்கு குளிக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். மக்களின் பொதுப்புத்தியை எப்போதும் ஏமாற்றிவிட முடியாது. மக்கள் சக்தியை எந்த மாய்மாலத்தாலும் கட்டுப்படுத்திட முடியாது. பிரித்தாலும் நிர்வாகத்தைவிட சக மனிதன் மீதான சகோதரத்துவமே மிக உயர்ந்தது என்பதை மனிதகுலம் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டேயிருக்கின்றது. அதைத்தான் இன்றும் காலம் கற்றுத் தருகின்றது.

சர்வாதிகார பாசிசம் எங்கு தலைதூக்குகின்றதோ அது நாடோ, இல்லை வீடோ எதுவாக இருந்தாலும், அங்கு அழிவு ஆரம்பமாகிவிட்டது என்று புரிந்து கொள்ளலாம்.

உலக வரலாற்றில் ஆரம்பம் முதல் இன்று வரை சர்வாதிகாரமும், மக்கள் விரோத ஆட்சியாளர்களின் இறுதி முடிவும் அழிவே என்பதை இன்று சிங்களத்தின் மண்ணிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள்மீது அதீதப் பக்தியுள்ளவனாக நடிப்பவன், சுயநலக்காரனாகவும், வக்கிரப் புத்தியுள்ளவனாகவுமே இருப்பான். தேசபக்தி என்பதை உயர்த்திப்பிடிப்பவனும், ஒரே பேரினம் மட்டுமே வாழ வேண்டும் என்பவனும் மக்கள் விரோத அரக்கனாகத்தான் இருப்பான். அவனிடம் உண்மை இருக்காது. அதிகாரம் ஒருவனை எப்போதும் அழிவு சக்தியாக அவனை மாற்றிவிடும். மாபெரும் அளவில்லாத அதிகாரம் அவனைச் சுற்றியுள்ளவரையும், இறுதியில் அவனையும் அழிக்காமல்விடாது. ஹிட்லர், இடி அமீன், முசோலினி, ராஜபக்ஷே போன்றோர் அதற்கு வரலாற்றுச் சான்றுகள்.

அப்படி எல்லையற்ற சர்வாதிகார வேட்கை கொண்டவர்கள் அனைவருமே பேரழிவின், இழிவின் அடையாளமாக நிலைத்துவிடுவார்கள். அதுவரை அது அவர்களுக்குத் தெரியாது. கெட்டவர்கள் முதலில் நன்றாக வாழ்வதற்கு இதற்காகத்தான்.

**Protesting is never a disturbance of the peace.**
**Corruption, Injustice, War & Intimidation are disturbances of the peace.**
**Bryant H. McGill** - American Author








# விவிலியம் அறிவோம் – 38

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யாக்கோபு லாபான் உடன்படிக்கை

யாக்கோபு ஆரானுக்கு வந்து ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன. லேயாவையும் ராகேலையும் திருமணம் செய்வதற்காக பதினான்குஆண்டுகள் அவர்லாபானுக்கு ஊழியம் புரிந்தார். இக்காலகட்டத்தில் அவருக்கு பதினொரு புதல்வர்களும் ஒருபுதல்வியும் பிறந்துவிட்டனர். யாக்கோபின் உழைப்பால் லாபானும் மிகவும் செல்வந்தராகிவிட்டார். தனது தந்தையின் நாட்டிற்குச் செல்ல வேண்டும்; தனது மனைவியர் பிள்ளைகளுக்காக உழைக்க வேண்டும் என்றஆவல் யாக்கோபை ஆரானிலிருந்து கானான் நாட்டிற்குச் செல்லத் தூண்டுகிறது. எனவேதன் தாய்மாமன் லாபானை நோக்கி, என் சொந்த இடத்திற்கும் நாட்டிற்கும் திரும்பிப்போகஎன்னை அனுப்பிவைப்பீராக! என் மனைவியரையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தந்து என்னைப் போகவிடும் (தொநூ 30:25-26) எனக் கேட்கின்றார். யாக்கோபு கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்; அவருடைய உழைப்பு தனக்கு மிகுந்த செல்வத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பது லபானுக்குத் தெரியும். எனவே யாக்கோபு தன் தந்தையின் நாட்டிற்குச் செல்வதை அவர் விரும்பவில்லை. எனவே, உமக்குத் தடையேதும் இல்லையெனில் தயவுகூர்ந்து இங்கேயே தங்கிவிடும். உம் பொருட்டு ஆண்டவர் எனக்கு ஆசிவழங்கியிருக்கிறார் என்பதைக் குறிபார்த்து அறிந்து கொண்டேன் எனக் கூறுகிறார்.அதன்பின் கூலிக்கான பேச்சுவார்த்தை நடக்கிறது. மேலோட்டமாகப் பார்க்கையில் யாக்கோபு கேட்கும் கூலி குறைவாகவே உள்ளது. அவர் ஆட்டு மந்தையினின்று, கலப்பு நிறமோ புள்ளியோ உடைய செம்மறியாடுகளையும் கறுப்பு நிறம் கொண்ட ஆட்டுக் குட்டிகள் அனைத்தையும் புள்ளியோ கலப்புநிறமோ உடைய வெள்ளாடுகளையும் தனியாகப் பிரித்துக் கொள்வேன். இவை எனக்குரிய கூலியாக இருக்கட்டும் (தொநூ 30:32) என்கிறார்.

பொதுவாக செம்மறியாடுகள் வெள்ளை நிறம் கொண்டவையாகவும் வெள்ளாடுகள் கறுப்புநிறம் உடையவையாகவும் இருக்கும். கலப்புநிறமோ, புள்ளியோ மற்றும் கறுப்புநிறம் கொண்ட செம்மறியாட்டுக் குட்டிகளும் மிகவும் அரிதாகவே காணப்படும். வெள்ளாடுகளிலும் கலப்புநிறமோ புள்ளியோ கொண்ட வெள்ளாடுகள் மிகவும் குறைவாகவே இருக்கும். யாக்கோபு கேட்பதை கொடுப்பதற்கு லாபான் ஒத்துக்கொள்கின்றார். அவைப் பிரிக்கப்படுவதற்கு முன்னால் லாபான் யாக்கோபை ஏமாற்றும் விதத்தில், வரியோ புள்ளியோ உடைய வெள்ளாட்டுக் கிடாய்களையும், கலப்புநிறமோ புள்ளியோ உடைய வெள்ளாடுகள் அனைத்தையும் வெள்ளைப் புள்ளிகொண்ட எல்லாவற்றையும், கறுப்பாய் இருந்த எல்லா ஆட்டுக்குட்டிகளையும் பிரித்துத் தம் புதல்வரிடம் ஒப்படைத்து, தனக்கும் தன் மந்தைகளை மேய்த்துவந்த யாக்கோபுக்கும் இடையில் மூன்றுநாள் வழித்தூரம் இருக்கும்படியும் செய்துவிட்டான் (தொநூ 30:35-36) என வாசிக்கிறோம். லாபான் தந்திரத்துடன் யாக்கோபை ஏமாற்றுகின்றான். யாக்கோபும் லாபானுக்குச் சளைத்தவன் அல்ல என்பதை யாக்கோபு செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் எவ்வாறு பொலிய வைக்கிறார் என்பதிலிருந்து தெரிகிறது. யாக்கோபு ஆடுகளை பொலியவைக்கும் விதம் பண்டைய காலத்தில் பழக்கத்தில் இருந்த சில வழிமுறைகளாக இருக்கலாம். இந்தப் பழக்கம்

தாய் ஆடு பொலியும் போதும், கருத்தாங்கியிருக்கும் போதும் ஏற்படுகின்ற அனுபவங்கள் வயிற்றிலிருக்கும் கருவுக்கும் கடத்தப்படுகிறது என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். யாக்கோபு தனது திட்டத்தை சரிவர பின்பற்றுகிறார். இதனால் அவருக்குக் கூலியாகக் கிடைக்க வேண்டிய செம்மறியாடுகளின் எண்ணிக்கையும், வெள்ளாடுகளின் எண்ணிக்கையும் பெருகுகின்றன. அவர் செல்வம் மிகுந்தவராக மாறுகிறார். யாக்கோபின் வளர்ச்சி லாபானின் மகன்களிடத்தில் சந்தேகத்தை உருவாக்குகிறது. தனது தந்தையின் சொத்துக்களை யாக்கோபு அபகரிப்பதாக அவர்கள் நினைக்கின்றனர். லாபானும் யாக்கோபுடன் முன்புபோல் அன்பு காட்டவில்லை. இதனால் யாக்கோபுதன் தந்தையின் நாட்டிற்குத் திரும்ப முடிவு செய்கிறார்.

யாக்கோபு தனது கூலியைப் பெறுவதற்காக லாபானுக்கு ஊழியம் செய்யத் தொடங்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. மொத்தமாக அவர் இருபது ஆண்டுகள் ஆரானில் வாழ்ந்துவிட்டார். இன்னும் தொடர்ந்து வாழ்வது பிரச்சினைகளை உருவாக்கும். இந்தச் சூழ்நிலையில் ஆண்டவரும் யாக்கோபை நோக்கி, உன் மூதாதையரின் நாட்டிற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் திரும்பிப்போ; நான் உன்னோடு இருப்பேன் (தொநூ 31:3) எனஉறுதி கூறுகிறார். யாக்கோபு தனது மனைவியரை அழைத்து தனது திட்டத்தைக் கூறுகிறார். ஆரானில் வாழ்ந்தபோது லாபானால் ஏற்பட்ட தீங்குகளையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். அதைத்





தொடர்ந்து கடவுள் அவருக்குக் கூறிய அனைத்தையும் கூறி, ஆரானைவிட்டு தான் பிறந்த நாட்டிற்குச் செல்வது கடவுளின் விருப்பம் என்பதைத் தெரியப்படுத்துகிறார். யாக்கோபின் மனைவியரும் அவர்களின்; தந்தை தங்களை அன்னியப் பெண்களை நடத்துவது போல் நடத்துவதாக உணர்கின்றனர்; எனவே கடவுள் உங்களுக்குச் சொன்னதெல்லாம் செய்யுங்கள் என யாக்கோபிடம் கூறுகின்றனர். யாக்கோபு தனது உடமைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு, ஊழியர்கள், மக்கள் மற்றும் மனைவியருடன் லாபான் ஊரில் இல்லாத நேரத்தில் ஆரானைவிட்டுத் தப்பியோடுகிறார். அவ்வாறு தப்பிச் செல்லும்போது ராகேல் தன் தந்தையின் குலதெய்வச் சிலைகளையும் திருடிச் செல்கிறார். இதை யாக்கோபிடமும் அவர் கூறவில்லை. ராகேல் குலதெய்வச் சிலைகளை எதற்காகத் திருடினார் என்பது தெரியவில்லை. தனது தந்தையிடமிருந்து எதாவது எடுத்துச் செல்ல வேண்டும் என அவர் நினைத்திருக்கலாம் அல்லது குலதெய்வச் சிலைகள் தன்னிடமிருந்தால் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் நன்மைகள் உண்டாகும் என நினைத்திருக்கலாம். உண்மையான காரணம் நமக்குத் தெரியவில்லை.

யாக்கோபு தனது மக்களுடனும், மனைவியருடனும், தன்னுடைய உடமைகளை எடுத்துக்கொண்டு தப்பியோடி விட்டான் என்பதைஅறிந்தலாபான் தனது உறவினர்களுடன் யாக்கோபை விரட்டிச் செல்கின்றார். ஏழுநாட்கள் பயணத்திற்குப் பின் கிலயாது மலைப்பகுதியில் அவர்களைக் கண்டுபிடிக்கின்றார். யாக்கோபை லாபான் சந்திக்கு முன் கடவுள் கனவின் மூலமாக,

நீயாக்கோபிடம் நல்லதோ கெட்டதோ யாதொன்றும் பேசவேண்டாம் (தொநூ 31:24)என எச்சரிக்கின்றார். அதன்பின் யாக்கோபிற்கும் லாபானுக்கும் இடையில் நடக்கின்ற உரையாடலில் லாபான் யாக்கோபை பல விதங்களில் குற்றம் சாட்டுகிறார். யாக்கோபு அவரை ஏமாற்றிவிட்டதாகவும், அவரது புதல்வியரையும் பிள்ளைகளையும் கடத்திக் கொண்டு வந்துவிட்டதாகவும் குற்றம் சாட்டுகிறார். மேலும் யாக்கோபின் இச்செயலால் தனது புதல்வியருக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் முறையான பிரியாவிடை கொடுக்க முடியாமல் போய்விட்டது என அங்கலாய்க்கிறார். அத்துடன் தனது குலதெய்வச் சிலைகளை யாக்கோபு திருடிவிட்டதாகவும் குற்றஞ் சாட்டுகிறார். ராகேல் குலதெய்வச் சிலைகளைத் திருடியது யாக்கோபுக்குத் தெரியாது. எனவே அவர் லாபானிடம், உம் குலதெய்வச் சிலைகளை யாரேனும் திருடியிருந்தால், அவன் உயிரோடு இருக்கவேண்டாம். உம்முடைய பொருள் ஏதாவது இங்கே என்னிடம் இருக்கின்றதா என்று நம் உறவினர் முன்னிலையில் பரிசோதித்துப் பார்த்து எடுத்துக் கொள்ளும் எனத் துணிச்சலுடன் கூறுகின்றார். இதைத் தொடர்ந்து லாபான் ஒவ்வொரு கூடாரமாக குலதெய்வச் சிலைகளைத் தேடுகிறார். எந்தக் கூடாரத்திலும் அவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியாக ராகேலின் கூடாரத்திற்கு வருகிறார். ராகேல் குலதெய்வச் சிலைகளை எடுத்துத் தம் ஒட்டகச் சேணத்தினுள் ஒளித்து வைத்து, அதன் மேல் உட்கார்ந்து கொண்டார் என வாசிக்கிறோம். அவர் அவ்வாறு செய்வதற்கு நான் மாதவிலக்காய் இருக்கிறேன் எனக் காரணம் கூறுகின்றார் .இந்தச் சூழ்நிலையில் லாபான் ஒட்டகச் சேணத்தினுள்; குலதெய்வச் சிலைகளைத் தேடுவது அவரைத் தீட்டுப்படுத்தும். ஆனால் ராகேலின் இச்செயல் குலதெய்வச் சிலைகளை தீட்டுப்படுத்துகின்ற செயல். இந்தச் செயலின் வழியாக ராகேல் குலதெய்வச் சிலைகளின் ஆற்றல் மீது நம்பிக்கைகொள்ளவில்லை எனத் தெரிகிறது. ஏனெனில் ராகேல் அச்சிலைகளை மதிப்பதாகக் தெரியவில்லை. ஆனால் அவரதுதந்தை அந்தச் சிலைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் செய்துவிடுகின்றார். சிலை வழிபாட்டை ஆதரிக்காத ஆசிரியர் சிலைகளை இழிவுபடுத்துவதற்காக இவ்வாறு எழுதுகிறார் என்றும் எனவும் இப்பகுதியைப் புரிந்து கொள்ளலாம்.

லாபான் தனது குல தெய்வச் சிலைகளைக் கண்டுபிடிக்க முடியாதது யாக்கோபிற்கு கோபத்தை வரவழைக்கிறது. அவர் லாபானிடம் பலவாறு பேசுகிறார். இருபது ஆண்டுகளாக லாபானுக்காக ஊழியம் புரிந்ததையும், லாபானின் செல்வங்கள் பெருகுவதற்குத் தான் காரணமாக இருந்ததையும், ஆனால் லாபான் தனது சம்பளத்தை கூட பலமுறை மாற்றியதையும் இன்னும் அவர் செய்த பல தீங்குகளையெல்லாம் எடுத்துரைக்கிறார். கடவுளின் உடனிருப்புதான் அவரைக் காப்பாற்றியிருக்கிறதுஎனக் கூறுகிறார். ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் அச்சமுமான என் தந்தையின் கடவுள் என்னோடு இருந்திராவிடில் உண்மையாகவே நீர் என்னை



வெறுங்கையனாய் அனுப்பியிருப்பீர் எனக் கூறுகிறார். ஆனால், கடவுள் என் துன்பத்தையும் கடின உழைப்பையும் கண்டு நேற்றிரவு உம்மை எச்சரித்திருக்கிறார் என்கிறார். கடவுள் எச்சரித்ததால் லாபான் யாக்கோபிற்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எந்தத் தீங்கையும் செய்யவில்லை. இதைத் தொடர்ந்து லாபானும் யாக்கோபும் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள சம்மதிக்கின்றனர். உடன்படிக்கையின் வாயிலாக லாபானின் குடும்பத்திற்கும் யாக்கோபின் குடும்பத்திற்கும் நடுவில் நல்லுறவு ஏற்படும் என எண்ணுகின்றனர். யாக்கோபு லாபானின் மகள்களான தனது மனைவியரைத் துன்புறுத்தக் கூடாது; அவர்களை விலக்கிவிட்டு வேறு எந்தப் பெண்களையும் மணக்கக்கூடாது. மேலும் லாபானும் யாக்கோபும் ஒருவருக்கொருவர் தீங்கிழைக்கக் கூடாது என முடிவு செய்கின்றனர். உடன்படிக்கையின் நினைவாக யாக்கோபு ஒரு கல்லை நினைவுத்தூணாக நிறுத்துகிறார். மேலும் கற்கள் சேகரிக்கப்பட்டு கற்குவியல் ஒன்றும் உருவாக்கப்படுகிறது. அந்தக் கற்குவியலுக்கு, லாபான் எகர் சகதுத்தா என்றும் யாக்கோபு கலயேது என்றும் பெயரிடுகின்றனர். யாக்கோபு அங்கே கடவுளுக்குப் பலி செலுத்துகிறார். அதன்பின் அவர்கள் உடன்படிக்கை விருந்தில் பங்கு கொள்கின்றனர். அடுத்த நாள், அதிகாலையில் லாபான் எழுந்து, தன் பேரப் பிள்ளைகளையும் புதல்வியரையும் முத்தமிட்டு அவர்களுக்கு ஆசி வழங்கினான். பின்னர் அவன் அவர்களை விட்டுப் பிரிந்து தன் இடத்திற்குத் திரும்பிப் போனான் என வாசிக்கிறோம். யாக்கோபும் தன் தந்தையின் நாட்டிற்குத் திரும்புகிறார்.

யாக்கோபு லாபான் கதை நமது வாழ்விற்குச் சில செய்திகளையும் தருகிறது. யாக்கோபும் லாபானும் ஒருவரையொருவர் ஏமாற்றுகின்றனர். யாக்கோபு ஒரு ஏமாற்றுக்காரராக இருந்தாலும் கடவுளின் உடனிருப்பும் ஆசீரும் அவருக்கு இருக்கிறது. அவர் வாழ்வையும் ஆசியையும் கொண்டுவரும் ஒரு பாலமாக உள்ளார். கடவுள் அவருக்கு கனிவு காட்டுகிறார். அனைத்து உலகிற்கும் தனது ஆசியை வழங்க அவரை ஒரு கருவியாகத் தேர்ந்தெடுக்கின்றார். கடவுள் தனது திட்டத்தை நிறைவேற்ற எளியவர்களையும் பலவீனமானவர்களையும் கருவிகளாகப் பயன்படுத்துவது ஆச்சரியம் தருவதாக உள்ளது. புதிய ஏற்பாட்டிலும் இயேசு குறைகள் நிறைந்த பலவீனமான பேதுருவைத்தான் புதிய இஸ்ரயேலான தனது திருச்சபையைக் கட்டியெழுப்பத் தேர்ந்தெடுக்கிறார். அவரால் மிகவும் அன்புசெய்யப்பட்ட யோவானைத் தேர்ந்தெடுக்கவில்லை. மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர். ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார் (1 சாமு 16:7) என்ற வரிகள் எவ்வளவு உண்மையானவை என்பது இதன் வழியாகத் தெரிகிறது. இரண்டாவதாக, நாம் வழிபடும் கடவுள் அன்பின் கடவுள். வாழ்வை வழங்கும் கடவுள். அவர் நம்மைவிட்டு வெகு தொலைவில் எங்கேயோ வான் வெளியில் இருப்பவரல்ல. நமது கடவுள் மெய்யியலோ, இறையியலோ காட்டும் கட்புலனாகாத கடவுளல்ல. அவர் வாழ்வோரின் கடவுள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுள். அவர் மனிதர்களின் மேலும் அவர்களது பிரச்சினைகள், போராட்டங்கள் மேலும் கரிசனையுள்ளவரா யிருக்கிறார். நாம் துன்பங்களால் துயரங்களால் சூழப்பட்டு அவரை நோக்கி குரலெழுப்பும்போது, நமக்கு உதவ, நம்மை மீட்க, நமக்கு வழிகாட்ட வருகின்றார் (35:3). வாழ்வில் ஆபத்துக்கள் வரும்போது நாம் அவரை அழைக்கும்போது ஆபத்துக்களை அகற்றி வாழ்வைத் தருபவராக இருக்கின்றார். இந்த உண்மையை உணர்ந்து கொண்டு நாம் பயணித்தால் யாக்கோபு போல ஆண்டவரால் ஆசிர்வதிப்பட்டவராக இருப்போம்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை


அருட்பணி. S. லூயிஸ் பிரிட்டோ
பங்குத்தந்தை
புனித சவேரியார் கோயில்
பேரூர் பங்கு
குளித்தலை, கரூர் மாவட்டம், திருச்சி மறைமாவட்டம்.


## பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு
15-05-2022

**திப 14 : 21ஆ - 27 / தி.வெ. 21 : 1 - 5அ / யோவா. 13 : 31 - 33அ, 34-35**

இறையேசுவில் அன்பான சகோதர சகோதரிகளே பாஸ்கா காலத்தின் ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டில் கடவுள் நமக்கு தரக்கூடிய செய்தி 'அன்பு'

### இயேசுவின் கட்டளை

நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்பது நம் ஆண்டவர் இயேசுவின் விருப்பம் மட்டுமல்ல வேண்டுகோள் மட்டுமல்ல மாறாக அவரது ஒரே கட்டளை.

### கடவுள்=அன்பு

நம்மோடு வாழக்கூடிய இஸ்லாமிய சகோதர சகோதரிகள் கடவுளை அளவற்ற அருளாளன் என்றும் நிகரற்ற அன்பாளன் என்றும் அழைக்கிறார்கள்.

அதேபோல சைவசித்தாந்தத்தில் திருமூலர் அன்பே சிவம் என்றும் சிவமும் அன்பும் ஒன்றே என்று கூறுகிறார். திருவிவிலியத்தில் அன்பே கடவுள் என்று கூறப்படுகின்றது. எனவே, அன்பு செய்யுங்கள் என்று சொல்லும் போது கடவுளைப்போல வாழுங்கள் என்றும் அர்த்தமாகிறது.

### இரத்தத்தில் சர்க்கரை அளவு பரிசோதனை போல அன்பு அளவு பரிசோதனை

அன்பு நம்மிடத்தில் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள ஒரு பரிசோதனை இருக்கிறது. 1 கொரிந்தியர் 13:4- 16 வரை சொல்லப்பட்ட இறைவார்த்தையில் நம்மிடத்தில் அன்பு இருந்தால் நாம் எப்படிப்பட்டவர்களாக இருப்போம் என்று விளக்கப்படுகிறது. பொறுமை நம்மிடம் இருந்தால் நாம் அன்பு உள்ளவர்கள் பரிவு நம்மிடம் இருந்தால் நாம் அன்பு உள்ளவர்கள் பொய்மையில் மகிழாமல் உண்மையில் மகிழ்ந்தால் நாம் அன்பு உள்ளவர்கள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டால் நாம் அன்பு உள்ளவர்கள் அனைத்தையும் நம்பினால் நாம் அன்பு உள்ளவர்கள் பொறாமைப் படாமல் இருந்தால் நான் அன்பு உள்ளவர்கள் அழுக்காறு கொள்ளாமல் இருந்தால் நாம் அன்பு உள்ளவர்கள் இவ்வாறு நம்மிடத்தில் இருக்கக்கூடிய குணங்களை வைத்து நம்மிடம் அன்பு இருக்கிறதா என்பதை பரிசோதித்துக் கொள்ளலாம்.

### நாம் இயேசுவின் சீடர்கள் என எவ்வாறு நிரூபிக்க முடியும்

அன்பு நம்மிடம் இருந்தால் மட்டுமே நாம் இயேசுவின் சீடர்கள் என்று உலகிற்குச் சொல்ல முடியும். அன்பு இல்லாத வாழ்க்கையில் நாம் இயேசுவின் சீடர் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

எ.கா

### முதல் கிறிஸ்தவர்கள் வாழ்க்கை

திருத்தூதர் பணி நூல் 2:42-47 பகுதியில் முதல் கிறிஸ்தவர்கள் அன்பு உள்ளவர்கள் என்பதை நான்கு விதத்தில் வெளிப்படுத்தினார்கள். ஒன்று திருத்தூதர்கள் கற்பித்தவற்றைக் கேட்பதிலும் ,இரண்டு நட்புடன் உறவாடுவ திலும் மூன்று அப்பத்தையும் பிட்குதலிலும் நான்கு இறைவேண்டலில் நிலைத்திருந்தும் தங்களது அன்பு வாழ்க்கையை வெளிப்படுத்தினார்கள் தங்களில் யாரும் உயர்ந்தவர் என்றோ தாழ்ந்தவர் என்றோ வேறுபாடு பார்க்காமல் தங்களில் யாரும் பணக்காரன் என்றோ ஏழை என்றோ பாகுபாடு பார்க்காமல் வாழ்ந்தார்கள். இதுதான் அன்பு வாழ்க்கை. இவ்வாறு அவர்கள் இயேசுவின் சீடர்கள் என்று பகிரங்கமாக அறிக்கையிட்டார்கள். இதனால்தான் நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வந்தது. எனவே, அன்பானவர்களே நம் ஆண்டவர் இயேசுவின் சீடர்களாய் நாமும் வாழ அன்பு வாழ்க்கையை வாழ்வோம்.அவரது ஒரே கட்டளையாகிய அன்புக் கட்டளையை கண்டிப்பாகக் கடைபிடிப்போம்

ஆமென்.



# பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

தி.ப.14:21ஆ-27, தி.வெ.21:1-5அ, யோவா. 13:31-33அ, 34-35

**15-05-2022**




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

நாம் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்புதான் நாம் இயேசுவின் சீடர் என்பதற்கான அடையாளம் என்பதை உணர்ந்தவர்களாய் அந்த அன்பு உறுதி பெறவும், நம்பிக்கை வலுப்பெறவும் வரம் வேண்டி வருகை தந்துள்ள இறைமக்களே உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

கிறிஸ்து இயேசு எவ்வாறு நம்மை அன்பு செய்கிறாரோ அவ்வாறே நாமும் அடுத்தவரை அன்பு செய்ய வேண்டும். அன்புதான் கிறிஸ்தவர்களின் அடையாளம். அன்புதான் நாம் இயேசுவின் சீடர்கள் என்பதற்கான சாட்சியம் என்ற கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளது இன்றைய வழிபாடு.

நம் ஆண்டவராம் இயேசுக் கிறிஸ்து தம் தந்தையாம் கடவுளின் அன்பை முழுமையாக மக்களோடு பகிர்ந்து கொண்டதைப் போல நாமும் அவர் தந்த அன்பை நமக்கு அடுத்திருப்பவரோடு பகிர்ந்து வாழ்கிறோமா என்பது குறித்து இன்றைய வழிபாடு வழியாக சிந்திப்போம்.

மனித வாழ்க்கையில் துன்பம் என்பது இயல்பானது, அத்துன்பத்தைத் தாங்குவதற்கு எத்தகைய மனநிலை நம்மிடம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும், ஆண்டவர் நமக்குக் கொடுத்த முதன்மையான அன்புக் கட்டளையைப் பற்றியும், அதன் வழியாக ஒளிர வேண்டிய நமது சீடத்துவ வாழ்வைப் பற்றியும் இன்றைய வாசகங்கள் எடுத்து இயம்புகின்றன.

இயேசுவின் சீடர்களாய் அவரைப் போன்று எல்லாரையும் அன்பு செய்து வாழும்போதும், நம்மை முழுமையாக அவருடைய கைகளில் ஒப்படைத்து சரணாகதி அடையும்போதும் வாழ்க்கையில் வரும் துன்பங்கள் எல்லாம் இன்பமாக மாறுகின்றன.

இயேசுவின் அன்பு மன்னித்து ஏற்றுக்கொள்ளும் அன்பு, பிறருடைய நலனில் அக்கறைகொள்ளும் அன்பு, அத்தகைய அன்பை நமது வாழ்வில் கடைப்பிடித்து, அதை மற்றவர்களிடம் வெளிப்படுத்தி வாழவும், இயேசுவின் அழைப்பை ஏற்று அவரது அடிச்சுவட்டில் வாழ்ந்து நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிக்கவும் இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

பவுலடியாரின் முதல் தூதுரை பயணத்தின் இறுதிப் பகுதியான இன்றைய முதல் வாசகமானது, அன்பு ஆற்றல் மிக்கது. அது எத்தகைய பணியையும் செய்யக் கூடிய சக்தியை நமக்குத் தர வல்லது என்பதை விளக்குகிறது. இயேசுவின் புதிய கட்டளையை ஏற்று அன்பு செய்து வாழ்வதன் வழியாக நாம் இயேசுவின் சீடர்கள் என்று சான்று பகர அழைக்கும் திருத்தூதர் பணிகள் வாசகத்திற்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

யோவான் கண்ட ஏழாவது மற்றும் கடைசி காட்சி புதிய விண்ணகத்தையும் புதிய மண்ணகத்தையும் காட்சிபடுத்துகிறது. விண்ணகத்தில் உறையும் இறைவன் நம் மத்தியிலே நம் உள்ளத்திலே வாழ்கின்றார். அவரது ஆட்கொள்ளும் அன்பு எங்கெல்லாம் வியாபித்துள்ளதோ அங்கெல்லாம் சாவு இராது, துன்பம் இராது, கண்ணீர் இராது என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அன்பே வடிவான தந்தையே இறைவா, அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென்று தங்களையே அர்ப்பணித்துக்கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், குருக்கள், கன்னியர், துறவியர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அருட்பணிகளில் எதிர்ப்படும் துன்பங் களையும், போராட்டங்களையும் பவுலைப் போல், பர்னபாவைப்போல் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற மனநிலையில் எதிர்கொண்டு வெற்றி கொள்வதற்கான ஆற்றலையும், ஞானத்தையும், உள்ள உறுதியையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அன்பால் இந்த அகிலத்தை ஆளும் அன்பு இறைவா, நாங்கள் அனைவரும் இயேசுவின் அன்புக் கட்டளையின் பொருள் உணர்ந்து அவரின் அன்பில் இறுதிவரை நிலைத்து நின்று பிறரை அன்புசெய்து வாழவும், எங்களது அன்பு சுயலமற்றதாய், ஆழமானதாய், அர்த்தமுள்ளதாய், எல்லோருக்கும் வாழ்வு தருவதாய் அமைந்திடவும், அவற்றின் மூலம் புதியதொரு விண்ணகத்தை, இன்றே இப்போதே இம்மண்ணகத்தில் கண்டு மகிழத் தேவையான அருள் வரங்களை அன்புடன் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அன்புக்கும், அருளுக்கும் ஊற்றான இறைவா, கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு தங்கள் எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கும் நிலையில் இருக்கும் எம் பங்கின் இளைய சமுதாயத்தை உம் பாதங்களில் ஒப்படைக்கிறோம். அவர்கள் உம் திருமகன் இயேசுவின் உடனிருப்பை உணர்ந்து அவரில் நம்பிக்கை கொண்டு சரியான எதிர்காலத்தை தேர்வு செய்ய தேவையான ஞானத்தையும், சூழ்நிலையையும் தந்து அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) எம்மைப் படைத்து காத்து வழிநடத்திவரும் அன்பு இறைவா, நாட்டை ஆள்வோரை உம் திருக்கரங்களில் ஒப்புக் கொடுக்கிறோம். நாட்டின் ஒற்றுமைக்கும், இறையான்மைக்கும், மத நல்லிணக் கத்திற்கும் பங்கம் விளைவிக்காத சட்டங்களையும், திட்டங்களையும் இயற்றி வேற்றுமையில் ஒற்றுமை என்ற உலகமே வியந்து போற்றும் எம் நாட்டின் பண்பாட்டினை கட்டிக் காத்திடும் நல்ல தலைவர்களாய் அவர்கள் விளங்கிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



### உங்கட்கு முன்னர் உதித்த குருமாரைப் பங்கப் படுத்தியதிப் பார்



உங்கள் காலத்திற்கு முன் பிறந்து வாழ்ந்த தீர்க்கதரிசிகளை இந்த உலக மக்கள் அவமானப்படுத்தினார்கள்.

உதித்த - பிறந்த, குருமார் - தீர்க்கதரிசிகள், பங்க - அவமானம்

# வத்திக்கான் செய்திகள்



## ஒற்றுமையே பிரச்சனைகளை களைவதற்கு உதவும்

**இவ்வாண்டு ஜூலையில்,
கான்டர்பரி பேராயர், ஸ்காட்லாந்து
கிறிஸ்தவ சபைத் தலைவர்
ஆகியோருடன்
தென் சூடானுக்கு, அமைதியின்
திருப்பயணியாகச் செல்லும்
நாளுக்காகக் காத்திருக்கிறேன்.**

– திருத்தந்தை பிரான்சிஸ்

ஒன்றிணைந்த பயணப் பாதை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்கத் திருஅவைக்கு, ஆங்லிக்கன் கிறிஸ்தவ சபை தன் கருத்துக்களை வழங்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மே 13, இவ்வெள்ளி காலையில் அச்சபை பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

ஆங்லிக்கன்–கத்தோலிக்க பன்னாட்டு உரையாடல் குழுவினரை (ARCIC) இவ்வெள்ளியன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு ஜூலை மாதத்தில், கான்டர்பரி பேராயர், ஸ்காட்லாந்து கிறிஸ்தவ சபைத் தலைவர் ஆகியோருடன் தென் சூடானுக்கு அமைதியின் திருப்பயணியாகச் செல்லும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என்று கூறினார்.

கிறிஸ்தவ சபைகளின் முழு ஒன்றிப்பை நோக்கிய பயணத்தில், ஆங்லிக்கன் கிறிஸ்தவ சபையோடு இணைந்து நடப்பதற்கு கத்தோலிக்கத் திருஅவை தன்னை அர்ப்பணித்துள்ளது என்பதை, இச்சந்திப்பிலும் திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்.

கத்தோலிக்கத் திருஅவையில் இடம்பெற்றுவரும் ஒன்றிணைந்த பயணம் என்ற நடவடிக்கை, தென் சூடானில் அமைதி, மற்றும், ஒப்புரவை ஊக்குவிப்பதற்கு தன் ஆவல் ஆகிய இரு அம்சங்கள் குறித்த சிந்தனைகளை, இச்சந்திப்பில் வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

### 15.05.2022 – ஞாயிற்றுக்கிழமை
முதல் வாசகம் : திப. 14:21ஆ - 27
இரண்டாம் வாசகம் : தி.வெ. 21: 1 - 5
நற்செய்தி வாசகம் : யோவா. 13: 31-33அ, 34-35

### 16.05.2022 – திங்கள்கிழமை
முதல் வாசகம் : திப. 14 : 5-18
நற்செய்தி வாசகம் : யோவா 14 : 21-26

### 17.05.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : திப. 14 : 19-28
நற்செய்தி வாசகம் : யோவா 14 : 27-31ஆ

### 18.05.2022 – புதன்கிழமை
முதல் வாசகம் : திப. 15 : 1-6
நற்செய்தி வாசகம் : யோவா. 15 : 1-8

### 19.05.2022 – வியாழக்கிழமை
முதல் வாசகம் : திப. 15 : 7-21
நற்செய்தி வாசகம் : யோவா. 15:9-11

### 20.05.2022 – வெள்ளிக்கிழமை
முதல் வாசகம் : திப. 15 : 22-31
நற்செய்தி வாசகம் : யோவா. 15 : 12-17

### 21.05.2022 – சனிக்கிழமை
முதல் வாசகம் : திப. 16 : 1-10
நற்செய்தி வாசகம் : யோவா. 15 : 18-21



"Glory to GOD, who is able to do far beyond all that we could ask or imagine by his power at work within us."

- Ephesians 3:20




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.**

அதிகாரம் 14
ஒழுக்கமுடைமை
குறள் – 132

**பொருள் :** ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.

சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள். (பிலிப்பியர் 4:8)

ஆபிரகாமின் உறவினர் பெயர் லோத். இவரும் ஆபிரகாமை போன்ற நற்குணங்களை உடையவர். அதனால்தான் அவர் சோதோமின் நுழைவாயிலில் அமர்ந்து கொண்டிருக்கும் பொழுது ஆண்டவரின் தூதர்களை கண்டதும் எழுந்து அவர்களை சந்திக்கச் சென்று தரைமட்டும் தாழ்ந்து அவர்களை வணங்கினார். ஏனென்றால் அந்த சோதோமின் நகரில் வாழ்ந்த அனைவரும் தீச்செயல் புரிந்தவர்கள்; எவரையும் மதிக்கத் தெரியாதவர்கள்; கடவுளைத் தூசிப்பவர்கள். ஆதலால் அவர்களை அழிக்க நினைத்ததை ஆண்டவர் ஆபிரகாமிற்கு அறிவிக்கிறார்.

உடனே ஆபிரகாம் தனது உறவினர் லோத்து சோதோமின் நகரில் இருப்பதை நினைந்து ஆண்டவரிடம், ‘தீயவரோடு நீதிமான்களையும் சேர்த்து அழித்து விடுவீரோ?‘ என்று அவருக்காக வாதாடுகிறார் ஆபிரகாம். அதை நினைவில் கொண்டு கடவுளும் அவருக்கு இறங்கி லோத்தைக் காப்பாற்றவே தம் தூதர்களை அந்த நகருக்கு அனுப்பி வைத்தார். அதற்கேற்றவாறு லோத்து, அந்நகர வாயிலில் அமர்ந்திருக்கும் பொழுது, கடவுள் தூதர்களை கண்டு ஓடிச்சென்று வணங்குகிறார்.

பிறகு, ‘என் தலைவர்களே, அருள்கூர்ந்து உங்கள் அடியானின் இல்லத்திற்கு வாருங்கள். உங்கள் கால்களைக் கழுவி, இரவு தங்குங்கள். காலையில் எழுந்து உங்கள் வழிப்பயணத்தைத் தொடருங்கள்‘ என்று சொன்னார். அவர்களோ, ‘வேண்டாம், பொதுவிடத்தில் நாங்கள் இரவு தங்குவோம்‘ என்று மறுமொழி சொன்னார்கள்.

அவர் அவர்களை மிகவும் வற்புறுத்தவே, அவர்களும் உடன் சென்று அவரது இல்லத்தினுள் நுழைந்தார்கள். அவர் புளிப்பற்ற அப்பம் சுட்டு அவர்களுக்கு விருந்தளிக்க, அவர்களும் உண்டார்கள். (தொடக்கநூல் 19:2,3).

மேலும் அந்நகரைச் சேர்ந்த தீய ஆடவர்கள் அன்றிரவு அவர்களுக்குத் தொல்லைகளைத் தந்தனர். அதிலிருந்து தூதர்கள் லோத்து

குடும்பத்தினரை அந்நகரை விட்டு அழைத்துச் சேவார் என்ற சிறிய நகருக்குள் செல்ல அனுமதித்தனர். அவர்கள் அங்கு செல்லும் வரை காத்திருந்து பின்னர் சோதோம், கொமாரா நகர் மேல் கந்தகமும், நெருப்பும் பொழியச் செய்தார் ஆண்டவர். (தொடக்கநூல் 19: 4 - 29) இதுவரையிலும் லோத்தினால் எந்த தவறும் நடைபெறவில்லை.

லோத்து சோவாரைவிட்டு வெளியேறி மலைக்குச் சென்று குடியேறினார். சோவாரில் குடியிருக்க அஞ்சியதால் தம் இரு புதல்வியருடன் ஒரு குகையில் வாழ்ந்து வந்தார்.

அப்பொழுது மூத்தவள் இளையவளை நோக்கி, 'நம் தந்தை வயது முதிர்ந்தவர். உலகெங்கும் உள்ள வழக்கிற்கேற்ப நம்மை மணந்து நம்முடன் உறவு கொள்ளுமாறு இப்பகுதியில் வேறு ஆடவர் எவரும் இல்லை.

'வா; நம் தந்தையைத் திராட்சை மது குடிக்க வைத்து, அவருடன் உறவுகொள்வோம். இவ்வாறு நம் தந்தையின் மூலம் வழிமரபைக் காத்துக் கொள்வோம்' என்றாள்.

அவ்வாறே அன்றிரவு தங்கள் தந்தையைத் திராட்சை மது குடிக்கவைத்தார்கள். பிறகு மூத்தவள் உள்ளே நுழைந்து தன் தந்தையுடன் படுத்துக் கொண்டதோ, அவள் எழுந்து சென்றதோ அவருக்குத் தெரியாது.

மறுநாள் மூத்தவள் இளையவளை நோக்கி, 'நேற்றிரவு என் தந்தையோடு நான் படுத்துக்கொண்டேன். இன்றிரவும் அவ்வாறே அவரைத் திராட்சை மது குடிக்கவைப்போம்.

லோத்து தன் மகள்களிடம்,ஏன் இப்படி செய்தீர்கள்? என்று அப்பெண்களை கண்டிக்கவோ, தண்டிக்கவோ இல்லை.

லோத்து எத்தனை வருடங்கள் நீதிமானாக இருந்தார் என்பதை விட தன் கடைசி காலங்களில் அவர் வம்சம், குடும்பம் நல்ல பெயர் சொல்லும்படி அமையாமல் ஒழுக்கம் சிதறி இழிச் சொல்லுக்கு ஆளானது என்பது உண்மையாயிற்று . ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடுகிறது.

ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத் தக்கது; (சபை உரையாளர் 7:8)

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...